**கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**முன்னிலை:திருமதி.த.விஜயலட்சுமி, பி.எஸ்.சி.,எம்.ஏ.,எம்.எட்.**

**ந.க.எண்.4585/ அ1/2021, நாள் : .11.2021.**

**பொருள்:** தமிழ்நாடு அமைச்சுப்பணி – கள்ளக்குறிச்சி மாவட்டம் – திருக்கோவிலூர் கல்வி மாவட்டம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2018–2019 மற்றும் 2019–2020–ல் Group – IV போட்டித் தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு, திருக்கோவிலூர், கபிலர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் **திரு.மோ.யாக்கோபு** என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்திடக்கோரும் கருத்துருவை பரிந்துரை செய்தல் – சார்பு.

**பார்வை:**
1. அரசாணை (நிலை) எண்.101,பள்ளிக்கல்வித் (வரவு செலவு –1) துறை, நாள்: 18.05.2018.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு செயலரின் கடிதம் எண். 2563/PSD-I2/2020, நாள்: 21.07.2020.
3. கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந. க. எண்.801/அ1/2020, நாள்:18.09.2020.
4. திருக்கோவிலூர், கபிலர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியரின் ந. க. எண்.09/2021, நாள்:10.11.2021.

= = = = = = = = = = = = = =

பார்வை 2–இல் கண்டுள்ள செயல்முறைகளின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2018–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டில் Group – IV போட்டித் தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு, பார்வை 3ல் காணும் செயல்முறை கடிதத்திற்கிணங்க, கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் கல்வி மாவட்டம், திருக்கோவிலூர், கபிலர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் **திரு.மோ.யாக்கோபு** என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 21.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து பார்வை 1ல் காணும் அரசாணைப்படி ஆணை வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பணியாளர் பெயர் | : | **திரு.மோ.யாக்கோபு** |
| 2. | பதவி | : | இளநிலை உதவியாளர் |
| 3. | பணியில் சேர்ந்த அலுவலகம் / பள்ளி | : | கபிலர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் |
| | தற்போது பணிபுரியும் அலுவலகம் / பள்ளி | : | கபிலர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி மாவட்டம் |
| 4. | பிறந்த தேதி | : | 20.03.1978 |

| | | | |
|---|---|---|---|
| 5. | இளநிலை உதவியாளர் பதவியில் சேர்ந்த நாள் | : | 21.09.2020, கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந. க. எண். 801/அ1/2020, நாள்:18.09.2020. |
| 6. | நியமனமுறை | : | அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் |
| 7. | பணிவரன்முறை செய்யப்படும் நாள் | : | 21.09.2020 முற்பகல் |
| 8. | தகுதிகாண் பருவத்திற்கு நிர்ணயிக்கப்படும் காலம் | : | மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம். |

மேற்படி பணியாளர் இரண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் பெற வேண்டியிருப்பின் அவைகளை தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே பெறத் தகுதியுடைவர் ஆவார் என்றும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

பார்வை 4ல் காணும் திருக்கோவிலூர், கபிலர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் மூலம் பெறப்பட்ட அசல் கல்வி சான்றுகள், பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்குமாறு திருக்கோவிலூர், கபிலர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு:–

1. பணிப்பதிவேடு.
2. பணிவரன்முறை ஆணை.

9/12/21

முதன்மைக்கல்வி அலுவலர்,
கள்ளக்குறிச்சி.

16/11/21

பெறுநர்.
**திரு.மோ.யாக்கோபு ,**
இளநிலை உதவியாளர்,
கபிலர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
திருக்கோவிலூர்.

நகல்.

1. தலைமை ஆசிரியர்,
   கபிலர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
   திருக்கோவிலூர். (உரிய வழியாக)
2. அலுவலக கோப்பிற்கு.